**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 156/2019**

**பி.வா.சா.1 – ஹேமலதா**

**<u>05–03–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. அம்மாசை மூர்த்தி மற்றும் நான் ஒரே பகுதியில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். 17.02.1917 ம் தேதியிட்ட பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள எனது சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. எனது சைட் எண். 235. வரைபடத்தில் உள்ள 235 சைட் என்னுடையது என்றால் சரிதான். எனது சைட்டிற்கு கிழபுறத்தில் 215 காலையில் தென்வடல் வழித்தடம் நீளமாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழித்தடத்திற்கு மேல்புறம் எனது சைட் உள்ளது என்றால் சரிதான். எனது கிரையப்பத்திரத்தில் சொத்து விபரத்தில் 265 காலைக்கும் மேற்கு என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை.

2. 215 காலையில் உள்ள தென்வடல் வழித்தடத்தை மறைத்து நான் எனது கிரையப்பத்திரத்தில் செக்கு பந்தி தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. செக்கு பந்தி தவறாக குறிப்பிட்டு தயார் செய்யப்பட்டுள்ள எனது கிரையப்பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பே வாதிகள் அங்கு குடியிருந்து வந்தார்கள் என்றால் தெரியாது. 40, 50 ஆண்டுகளாக தாவா சொத்தில் வாதிகள் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதிக்கு பட்டாப்படி பாத்தியப்பட்ட சொத்தில் குறிப்பிட்ட 3 அடியை நான் ஆக்கிரமித்துள்ளேன் என்றால் சரியல்ல, அது நாங்கள் இருவருமே சுண்ணாம்பு அடிப்பதற்கான பொது தடம். நான் சொல்லும் சந்து வாதிகளுக்கு உரியது என்றும், நான் வாதிகளுடைய சந்தை சேர்த்து கட்டிவிட்டேன் என்றால் சரியல்ல, சந்து இன்றும் அங்கு உள்ளது.

3. நான் பொது வழியில் இருந்த வாதிகளின் சந்தை ஆக்கிரமித்துவிட்டேன் என்றும், வாதிகள் அவர்களுடைய பங்கில் இடம் விட்டு வழித்தடமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. அம்மாசை குடியிருந்து வரும் வீட்டிற்கு அருகே 30, 40 வீடுகள் அதே லைனில் உள்ளது என்றால் சரியல்ல. அதன் படி அப்பகுதியில் குடியிருக்கும் அனைவருக்கும் பட்டா வழங்கப்பட்டு வாதிகளின் சுவாதினத்தில் உள்ள வீட்டிற்கும் பட்டா பரிந்துரையில் உள்ளது என்றால் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அவர்கள் பட்டா வாங்கவில்லை, அது வழித்தடம், அந்த வழித்தடத்தில் டென்ட் போல் வாதிகள் அமைத்து எனக்கு வழிவிடாமல் தடுக்கிறார்கள். அம்மாசை குடியிருப்பது ஓட்டுவீடுதான் என்றால் பட்டா பூமியில் கான்கிரேட் வீடும், வழித்தடத்தில் ஓட்டுவீடும் உள்ளது. எனது வீட்டிற்கு கிழபுறம் உள்ள தென்வடல் பாதையை நான் ஆக்கிரமித்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. தென்வடல் வழித்தடத்தை நான் ஆக்கிரமித்துள்ளதால் வாதிக்கு பட்டாப்படி பாத்தியப்பட்ட இடத்தை கேட்டு நான் பிரச்சினை செய்கிறேன் என்றால் சரியல்ல, தாவா சொத்தில் வாதிகள் 40, 50 ஆண்டு காலமாக சுவாதீனத்தில் வைத்து குடியிருந்து வருகிறார்கள் என்றும், அதனை நான் இடையூறு செய்வதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனது அரசியல் பின்பலத்தை பயன்படுத்தி வாதிகளிடம் பிரச்சினை செய்யவேண்டும் என்பதற்காகவே மாநகராட்சியிடம் புகார் கொடுத்துள்ளேன் என்றால் எனக்கு உண்டான வழித்தடத்தை மட்டும் கேட்டு தான் புகார் கொடுத்தேன். தென்வடல் வழித்தடம் எனக்கு இருந்து அதனை தான் ஆக்கிரமித்துவிட்டு தாவா சொத்து உள்ள வழித்தடத்தை கேட்டு பிரச்சினை செய்கிறேன் என்றால் சரியல்ல.

5. வழக்கு சொத்து சுவாதீனத்தின் அடிப்படையில் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் நான் இடையூறு செய்தவற்கு எவ்வித

உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு தாவா வழித்தடத்தை தவிர வேறு வழித்தடம் இல்லை. தவறாக செக்குபந்தியை குறிப்பிட்டு கிரையம் செய்து நான் வாதிகளிடம் பிரச்சினை செய்வதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் நான் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா படி வாதிகள் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றும், நான் தாக்கல் செய்துள்ள எதிர்வாதம் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.05 17:09:34 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.